**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>**

**<u>OS.No. 40/2013</u>**

**Date:17.12.2021** **DW.1(ஏகப்பன்)**

**<u>பி.வா.சா-1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

தாவா பி செடியூல் 2-வது இலக்க வீட்டை பொறுத்து வாதிக்கு என் தகப்பனார் 1-ம் பிரதிவாதி 29.05.2013-ம் தேதி ஒரு ரிஜிஸ்டர் இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்து அந்த சொத்தை அவருக்கு பாத்தியப்படுத்தி கொடுத்திருக்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தின் சார்பதிவாளர் நகலை நான் காப்பி எடுத்து வாதி பெயரிலும், 1-ம் பிரதிவாதியின் பெயரிலும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்ற கிளையில் நீதிப்பேராணை எண்.19818/2015 என ஒரு ரிட் மனு தாக்கல் செய்து அது இன்று வரை நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நாட்டரசன்கோட்டையில் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் என் தாயார் கண்ணாத்தாள் ஆச்சி பெயரிலும், வாதி பெயரிலும் லாக்கர் நம்பர் 84 மற்றும் 233 என்ற இரண்டு லாக்கர்கள் இருந்தன. அந்த இரண்டு லாக்கர்களிலும் என்னென்ன பொருட்கள் இருந்தது அல்லது நகைகள் மற்றும் பணங்கள் இருந்தது என்பது எனக்கு தெரியாது. லாக்கர் நம்பர் 84-ல் எங்கள் குலதெய்வ சாமி நகைகள் இருந்தனவா என்பது பற்றி எனக்கு தெரியாது. அதில் எங்கள் குடும்ப குலதெய்வ சாமி நகைகள்

இருந்தது என்றும், அதை பிரேக் ஓபன் செய்து அதிலிருந்த நகைகள் அனைத்தும் எங்கள் சித்தப்பா சுப்ரமணியன் செட்டியார் மனைவி திருமால் ஆச்சி வசம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அந்த இரண்டு லாக்கரின் சாவியும் எனது தாயார் இறந்த பிறகு சாவி யாரிடம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த இரண்டு லாக்கரும் பிரேக் ஓபன் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ-40 ஆவணம் வாதி பெயரிலும், எங்களது தாயார் பெயரிலும் தாக்கல் உள்ளது என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்திருக்கிறேன். இந்த பி.வா.சா.ஆ-40-ன் தொடர்ச்சியாகத்தான் அந்த லாக்கர் நம்பர் 84 மற்றும் 233 ஆகியவை எனக்கும், வாதிக்கும் மேற்படி ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியிலிருந்து தகவல் கொடுத்து எங்கள் இருவர் முன்னிலையிலும், மேற்படி திருமால் ஆச்சி முன்னிலையிலும் வங்கி அதிகாரிகள் மேற்படி இரண்டு லாக்கரையும் பிரேக் ஓபன் செய்தார்கள் என்றும், அது எனக்கு தெரிந்திருந்தும் அதை நான் வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கல்யாணத்தின்போது எனது தாயார் எத்தனை பவுன் நகை போட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் திருமணத்தின்போது எனக்கு என் தாயார் 60 பவுன் நகை கொடுத்தார்கள் என்றும், அதேபோல வாதிக்கு அவர் திருமணத்திற்காக 60 பவுன் நகையை என் தாயார் கண்ணாத்தாள் ஆச்சி

லாக்கர் நம்பர் 233-ல் வைத்திருந்தார் என்றும், அந்த நகையை தான் வாதி வசம் என் சம்மதத்தின் பேரில் வங்கி அதிகாரிகள் ஒப்படைத்தார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு 1994-ம் வருடம் கல்யாணம் நடந்ததா என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடந்த காலம் முதல் 15.04.2011 வரை அதே ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் என் பெயரிலும், எனது மனைவியான 3-ம் பிரதிவாதி பெயரிலும் லாக்கர் நம்பர் 193-ல் இருந்து அதை நான் ஆபரேட் செய்து வந்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்படி 193 என்ற ஒரு லாக்கர் எங்கள் பெயரில் இருந்ததா என்பதே எனக்கு ஞாபகம் இல்லை. எனது சின்ன மாமனார் பெயர் டி.வேலாயுதம் செட்டியார். அவர் ஆடிட்டராக இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. அவர் காரைக்குடியில் மீனாசேப் வால்ஸ் என்ற லாக்கர் நிறுவனம் நடத்தி வருகிறாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. எனது பெயரில் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் லாக்கர் நம்பர் 193-ல் இருந்ததை 15.04.2011-ல் க்ளோஸ் செய்துவிட்டு அந்த மீனாசேப் வால்ஸ்ல் லாக்கர் ஓபன் செய்து நகைகளை வைத்துள்ளேனா என்றால் சரியல்ல. இந்தியன் பேங்க், மதுரை டவுன்ஹால் ரோடு கிளையில் 1-ம் பிரதிவாதி பெயரிலும், என் தாயார் பெயரிலும் லாக்கர் நம்பர் 47 என்ற ஒரு லாக்கர் இருந்ததா என்பது எனக்கு தெரியாது. எனது தாயார் இறந்தபிறகு அந்த லாக்கர் சாவி

தொலைந்து விட்டது என்று அந்த வங்கிக்கு தெரிவித்து என் முன்னிலையிலும், என் தகப்பனாரான 1-ம் பிரதிவாதி முன்னிலையிலும் 20.12.2007-ல் வங்கி அதிகாரிகளால் பிரேக் ஓபன் செய்யப்பட்டு அதில் அந்த ரிஜில்டர் ஆப் லாக்கர்ஸ் பிரேக் ஓபன் என்ற ரிஜிஸ்டரில் நானும், என் தகப்பனாரும் கையெழுத்திட்டிருக்கிறோம் என்று சொன்னால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படுகிற அந்த 20.12.2017-ம் தேதிய மேற்படி வங்கியின் ரிஜிஸ்டர் ஆப் லாக்கர்ஸ் பிரேக் ஓபன் என்பதில் நானும் கையெழுத்திட்டிருக்கிறேனா என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஆவணம் சாட்சியிடம் காட்டப்பட்டு அந்த கையெழுத்து என்னுடையதுதானா என்று கேட்டதற்கு அதை பார்த்துவிட்டு ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். அந்த ஆவணத்திலுள்ள சிங்காரம் என்று உள்ளது எனது தகப்பனார் கையெழுத்து என்றும் அதற்கு கீழ் ஏகப்பன் என்று கையெழுத்திட்டிருப்பது எனது கையெழுத்து என்றும் அதை தற்போது இந்த வழக்கிற்காக மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த லாக்கரில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. எனது தாயார் இறந்தபிறகு அந்த லாக்கர் எனது முன்னிலையிலும், எனது தகப்பனார் முன்னிலையிலும் வங்கி அதிகாரிகளால் பிரேக் ஓபன் செய்யப்பட்டு அதிலுள்ள அனைத்து நகைகள், பணங்கள் மற்றும் பிச்சட்

டிபாசிட் ரிசிப்ட்கள் மற்றும் அனைத்து ஆவணங்களையும் எடுத்து எனது தகப்பனார் என்னிடம் ஒப்படைத்து பாகப் பிரிவிணை செய்யும் காலத்தில் அவற்றை பிரித்துக் கொள்ளலாம் என்று என்னிடம் என் தகப்பனார் ஒப்படைத்திருந்தார் என்றும், அதை நான் தற்போது வேண்டுமென்றே மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாட்டரசன்கோட்டையில் உள்ள பூர்வீக வீட்டில் ஒரு பட்டா இருந்ததா என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை. அந்த வீட்டில் எனது பாட்டனார் காலத்திலிருந்தே ஒரு பெட்டகம் உள்ளது என்றும், அந்த பெட்டகத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட நகைகள், ரொக்கப்பணம் மற்றும் அசல் ஆவணங்கள் இருந்தது என்றும், அதை என் தாயார் இறந்தபிறகு நானும், என் தகப்பனாரான 1-ம் பிரதிவாதியும் திறந்து அதிலிருந்த 90 இலட்சம் ரொக்கத்தையம், 1,500 பவுன் நகைகளையும் மற்றும் அசல் ஆவணங்களையும் என் தகப்பனார் என் வசம் பாதுகாப்பு கருதி ஒப்படைத்து அந்த பணத்தைக் கொண்டு குடும்ப கொடுக்கல் வாங்கல் தொழிலை மேலும் விருத்தி செய்யும்படியும், அவற்றையும் பாகப்பிரிவினை செய்துகொள்ளும்பொழுது வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் பிரித்துக்கொள்ளலாம் என்று சொல்லி ஒப்படைத்திருந்தார் என்றும், அவைகளையும் நான் தற்போது இந்த வழக்கிற்காக மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் எனது தாயார் இறந்த அன்று

மசேியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து கிரியை முடியும் வரை இந்தியாவிலேயே இருந்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது கல்யாணத்தின்போது எனது மாமனாரும், எனது தகப்பனாரும் சேர்ந்து இசைக்குடிமானம் என்ற ஒரு ஆவணத்தை எழுதிக் கொண்டார்கள். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய தகப்பனார் மற்றும் என் மாமனாரின் கையெழுத்துக்கள் ஆகும். அந்த ஆவணம் வா.சா.ஆ-122. (2, 3 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஆவணம் வாதியின் சரியான கஸ்டடியிலிருந்து தாக்கல் செய்யாததனால் ஆட்சேபணை செய்யப்படுகிறது) எனது தகப்பனார் எனது கல்யாணத்திற்கு வந்திருந்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-122 ஆவணம் திருமணத்தன்று தான் எழுதிக் கொள்ளும் ஆவணமா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. எனது திருமணத்திற்கு பிறகு எத்தனை முறை எனது தகப்பனார் இந்தியாவிற்கு வந்திருக்கிறார் என்றால் ஞாபகம் இல்லை. என் திருமணத்திற்கு பிறகு 1-ம் பிரதிவாதி இந்தியாவிற்கு வந்திருக்கிறார் என்பதும் எனக்கு ஞாபகம் இல்லை. 1-ம் பிரதிவாதி அடிக்கடி இந்தியாவிற்கு வந்து சென்றார் என்றும், அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும், என் திருமணத்திற்கும் அவர் வந்திருந்தார் என்றும், அவர் இந்த வழக்கில் சாட்சி சொல்ல வரக்கூடாது என்பதற்காக நான் அவர் மீது போலீஸ் புகார்

கொடுத்து அவருக்கு எதிராக பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்ட காரணத்தினால் தான் அவரால் இந்தியாவிற்கு வரமுடியவில்லை என்று சொன்னால் அந்த விவரத்தை 1-ம் பிரதிவாதியிடம் தான் கேட்க வேண்டும். மேற்படி பி செடியூல் 3 முதல் 7 இலக்க சொத்துக்களை வாதி மைனராக இருந்தபோது அவர் பெயரிலும், பி செடியூல் 8 முதல் 12 இலக்க சொத்துக்கள் நான் மைனராக இருந்தபோது என் பெயரிலும் கிரையங்கள் வாங்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் இருவரும் மைனராக இருந்த காலத்தில் ஏதாவது சொத்துக்கள் வாங்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ-9 முதல் 13 கிரைய ஆவணங்களை சாட்சியிடம் காட்டி அவை நான் மைனராக இருந்தபோது கிரையம் வாங்கப்பட்டதாக கண்டிருக்கிறதா என்று கேட்டபோது சாட்சி அந்த ஆவணங்களை தான் படித்து பார்த்துவிட்டதாகவும், அவ்வாறு தன்னை அந்த பத்திரங்களில் மைனராக காட்டப்பட்டுள்ளதா என்று கேட்டபோது எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். எனது பெயரிலும், வாதி பெயரிலும் மைனராக இருந்தபொழுது கிரையம் வாங்கப்பட்ட ரிஜிஸ்டர் பத்திரங்கள் இருந்தால் அது எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது. நானும், வாதியும் மைனராக இருந்தபோது இருவர் பெயரிலும் தனிதனியாக வருமான வரிக் கணக்குகள் இருந்ததா என்றால்

என் பெயரில் இருந்தது. வாதி பெயரில் தனியாக வருமான கணக்கு இருந்ததா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் மைனராக இருந்தபொழுது எனக்கு என்ன வருமானம் இருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எந்த பணத்தை வைத்து அந்த வருமான வரி செலுத்தப்பட்டது யாரால் செலுத்தப்பட்டது எனக்கு பரிசாக வந்த பணத்தைக் கொண்டு நான் மைனராக இருந்தபொழுது நானே வருமான வரி செலுத்தினேன். நானும், வாதியும் மைனர்களாக இருந்தபொழுது என் பெயரிலும், வாதி பெயரிலும் தனிதனியாக கிரையங்கள் வாங்கப்பட்டுள்ளது என்றும், அது எனக்கு தெரியும் என்றும், அந்த கிரையங்களுக்கான கிரையத் தொகை பொதுக்குடும்ப ஐவேஸிலிருந்து பொதுக்குடும்ப நன்மைக்காக எங்கள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்பதும் எனக்கு தெரியும் என்றும், தற்போது அவற்றை நான் வேண்டுமென்றே மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல நானும், வாதியும் மைனர்களாக இருந்தபொழுது எங்கள் இருவருக்கும் தனிப்பட்ட முறையில் எந்த வருமானமும் இல்லையென்றும், எங்கள் இருவர் பெயரிலும் மைனர்களாக இருந்தபொழுது வருமானவரி செலுத்தப்பட்டது என்றும், அந்த தொகைகளும் பொதுக்குடும்ப ஐவேஸிலிருந்துதான் செலுத்தப்பட்டது எனக்கு தெரியும் என்றும், அதை நான் இந்த வழக்கிற்காக தெரியாது என்று

சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-3 வரி ரசீது என் அப்பத்தா பெயரில் தாவா வழக்கிற்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ-5 மற்றும் 6 ஆகியவை இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டபிறகு தாக்கல் செய்யப்பட்ட புகார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு புகார்களும் வாதி மீது கிரிமினல் வழக்கு போட்டால் அவர் தாவா சொத்துக்களில் பாகம் கேட்காமல் விலகி விடுவார் என்று அவரை மிரட்டுவதற்காக கொடுக்கப்பட்ட பொய் புகார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் செலுத்தப்பட்டதாக சொல்லும் பி.வா.சா.ஆ-7 ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு செலுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது தாயாருக்கு அவர் உயிருடன் இருந்தபோது அவருக்கு புற்றுநோயும், தோல்வியாதியும், வயிற்றுவலி மற்றும் மூட்டுவலி இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வியாதிகளுக்காக எனது தாயார் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்தாரா என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை. எனது தாயாருக்காக நான் ஏதாவது மருத்துவ சிகிச்சை செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் சேலத்தில் பிரணவ் மருத்துவமனை மற்றும் எஸ்.கே.எஸ் மருத்துவமனையில் அவரது இறுதிக் காலத்தில் சிகிச்சை பெற்று வந்தாரா என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை. என்

தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காக வாதி ஏதாவது பணம் செலவழித்துள்ளாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மருத்துவமனையில் இருந்த எனது தாயார் அவர் இறக்கும் தருவாயில் அவரை காப்பாற்ற முடியாது என்று மருத்துவர்கள் சொன்ன தருவாயில் அவரை சேலம் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்து ஆம்புலன்ஸ் மூலமாக நாட்டரசன்கோட்டைக்கு கூட்டி வரப்பட்டார் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை. அவ்வாறு என் தாயாரை சேலத்திலிருந்து நாட்டரசன்கோட்டைக்கு ஆம்புலன்சில் அழைத்து வரும் வழியில் இறந்துவிட்டார் என்பது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாயார் இறக்கும்பொழுது அவருக்கு என்ன வயது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாயார் இறப்பதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவருக்கு ஏற்பட்டிருந்த நோய்களின் காரணமாகவும், வயது முதிர்ந்த நிலையில் இருந்த காரணத்தினாலும் அவர் சுயமாக சிந்திக்க முடியாத நிலையில் சுயநினைவை இழந்து கை, கால்கள் விலங்காது படுத்தபடுக்கையாக இருந்து இறந்தார் என்றால் சரியல்ல. நான் கூறியபடி பி.வா.சா.ஆ-8 உயில் சாசனத்தை என் தாயார் எழுதி வைக்கவில்லை என்றும், அதிலுள்ள எஸ்.கண்ணாத்தாள் ஆச்சி என்ற கையெழுத்துக்கள் அவருடையது இல்லை என்றும் அந்த உயில் சாசனம் இந்த வழக்கிற்காக

வாதியையும், 1-ம் பிரதிவாதியையும் மோசடி செய்வதற்காக நான் எனக்கு வேண்டியவர்களை வைத்து பொய்யாக தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ-10 வருமான வரி என் தாயார் பெயரில் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து தான் செலுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ- 12, 13 ஆகிய இரண்டு கிரைய ஆவணங்களும் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து பொதுக்குடும்ப நன்மைக்காக கிரையம் வாங்கப்பட்டு அவைகள் பொதுக்குடும்ப சொத்துக்களாகவே இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ-16 மற்றும் 17 ஆகியவை நான் மைனராக இருந்த காலத்தில் செலுத்தப்பட்ட வருமான வரி ரசீது என்று சொன்னால் சரிதான். அந்த கால கட்டத்தில் எனக்கு எந்த வருமானமும் இல்லை. பொதுக்குடும்ப வருமானத்தை எனது பெயரில் வருமானமாக காட்டி அதற்கான வருமான வரியை பொதுக்குடும்ப ஐவேஸிலிருந்து செலுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ-18 என்ற என் பெயரில் உள்ள வருமான வரி ரிட்டர்ன்ஸ் வாதியையும், 1-ம் பிரதிவாதியையும் ஏமாற்றுவதற்காக பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ-19, 21, 22 ஆகிய 3 கிரையப் பத்திரங்களும் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து என் பெயரில் பொதுக்குடும்ப நன்மைக்காக வாங்கப்பட்டது என்றும், அதில்

எனக்கு தனிப்பட்ட உரிமை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ-20 அடமானப்பத்திரத்தை வாதியும், 1-ம் பிரதிவாதியும் என்னிடம் சேர்ந்து எழுதிக்கொடுக்கவும் இல்லை அந்த ஆவணத்தில் அவர்கள் சாட்சிக் கையெழுத்திடவும் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணமானது வாதியையும், 1-ம் பிரதிவாதியையும் மோசடி செய்வதற்காகவும், ரிக்கார்டு ஏற்படுத்துவதற்காகவும் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ-23 ஆவணம் நான் என் மனைவியான 3-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரம் வாதியையும், 1-ம் பிரதிவாதியையும் மோசம் செய்வதற்காக மலரணையாக எந்த பணமும் கொடுக்காமல் எழுதி வைக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ-23 லிருந்து 34 வரையுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பின்னாடி செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் ஆகும். இவை அனைத்தும் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து பொதுக்குடும்ப நன்மைக்காக செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.